
# G.C.E. A/L

# கணக்கீடு

## வங்கிக் கணக்கிணங்கற் கூற்று

## BANK RECONCILIATION STATEMENT



College of Commerce and Arts
K. K. S. ROAD, CHUNNAKAM.

# பயிற்சி நூல்

ஆசிரியர்: S. தவா
B.Com. (Hons)
(Acc.Spl)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.C.E. A/L

# கணக்கீடு

## வங்கிக் கணக்கிணைக்கற் கூற்று

## Bank Reconciliation Statement

**பயிற்சி நூல்**


ஆசிரியர்:

**S.தவா**

B.Com (Hons)

(Acc. Spl)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிக் கணக்கிணைக்கற் கூற்று
# BANK RECONCILIATION STATEMENT

ஆசிரியர்:-திரு.S.தவா
B.Com (Hons) (Acc.Spl)

1) "விநாயகா" வியாபார நிறுவனத்தின் காசேடானது 31.03.2001ல் காசேட்டின்படி வங்கிமீதியாக 80000 ரூபாவினைக் காட்டியது. ஆனால் வணிகவங்கியினால் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்றிலுள்ள வங்கிமீதியுடன் இணங்கவில்லை. அதற்கான காரணங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

1. மாற்றப்படாத காசோலையின் பெறுமதி 3500 ரூபாவாகும்.
2. வசூலிக்கப்படாத காசோலையின் பெறுமதி 2000 ரூபாவாகும்.
3. வங்கியில் கடன்பட்டோனான ஜங்கரனின் நேரடிவைப்பு 2150 ரூபாவாகும். இது காசேட்டில் இன்னமும் பதியப்படவில்லை.
4. வங்கி செலுத்திய காப்புறுதி 6000 ரூபா காசேட்டில் இன்னமும் பதியப்படவில்லை.
5. வங்கி வசூலித்த முதலீட்டு வருமானம் 1300 ரூபா காசேட்டில் இன்னமும் பதியப்படவில்லை.
6. வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் 500 ரூபா காசேட்டில் இன்னமும்பதியப்படவில்லை.

தயாரிக்க வேண்டியது

31.03.2001ல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கற் கூற்று

2) 31.12.2000ல் "ராகுலன்" வியாபார நிறுவனத்தின் காசேடானது காசேட்டின் படி வங்கி மீதியாக சாதகமான மீதியாக 64000 ரூபாவினைக்காட்டியது. ஆனால் வங்கியினால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்றிலுள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக்குரிய காரணங்கள் வருமாறு.

(அ) நிலையான கட்டளைக்கமைய வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம் 1800ரூபாவாகும்.

(ஆ) நிலையான கட்டளைக்கமைய வங்கி வசூலித்த பங்குலாபம் 2500ரூபாவாகும்.

(இ) வங்கியில் ராதிகா கடன்பட்டோனின் நேரடிவைப்பு 1600 ரூபாவாகும்.

(ஈ) வங்கியில் பணமாக மாற்றப்படாத காசோலையின் பெறுமதி 3450 ரூபாவாகும்.

(உ) வங்கியால் பணமாக மாற்றப்படாத காசோலையின் பெறுமதி 2750 ரூபாவாகும்.

(ஊ) விற்பனையால் பெற்ற பணமான 500 ரூபா தவறுதலாக காசேட்டின் வங்கி நிரலில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

3) "சயந்தன்" வியாபார நிறுவனத்தின் காசேடானது 31.12.2001ல் காசேட்டின் படி வங்கி மீதியாக 26600 ரூபாவினை எடுத்துக் காட்டியது. ஆனால் வியாபார நிறுவனத்திற்கு வணிகவங்கியால் அனுப்பப்பட்டுள்ள வங்கி கூற்றிலுள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக்குரிய காரணங்கள் வருமாறு.

(1) விற்பனையால் பெற்ற பணமான 1500 ரூபா தவறுதலாக காசேட்டின் வங்கி நிரலில் வரவில் 500 ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

(2) வங்கி வசூலித்த பங்குலாபம் 3000 ரூபா காசேட்டில் 300 எனப் பதியப்பட்டுள்ளது.

(3) வங்கி செலுத்திய மின்சாரம் 4000 ரூபா காசேட்டில் 400 ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) செலவுவைக்கப்படாத காசோலைகளின் பெறுமதிகள் வருமாறு. 600 ரூபா, 400 ரூபா, 500 ரூபா.

(5) வரவுவைக்கப்படாத காசோலைகளின் பெறுமதிகள் வருமாறு. 1400 ரூபா, 600 ரூபா, 500 ரூபா.

(6) வங்கியில் நாதன் கடன்பட்டோனின் நேரடிவைப்பு 1100 ரூபாவாகும்.

(7) வங்கி அறவிட்ட வங்கிக்கட்டணம் 1800 ரூபா காசேட்டில் 800 ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

4) "பாலன்" வியாபார நிறுவனத்திற்கு 31.03.2000ல் வணிக வங்கியால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்றானது வங்கிக் கூற்றுப்படி வங்கி மீதியாக 61600 ரூபாவினைக் காட்டியது ஆனால் அத்திகதியில் நிறுவன காசேட்டின்படி வங்கி மீதியுடன் இணங்காமைக்குரிய காரணங்கள் வருமாறு.

(1) வங்கி செலவுவைத்த முதலீட்டு வருமானம் 4000ரூபா காசேட்டில் 400 ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

(2) வங்கி வரவு வைத்த மின்சாரம் 3000 ரூபா காசேட்டில் 300 ரூபா எனப்பதியப்பட்டுள்ளது.

(3) விற்பனையால் பெற்ற பணமான 6000 ரூபா தவறுதலாக காசேட்டின் வங்கி நிரலில் வரவில் 600 ரூபாவால் குறைத்துப் பதியப்பட்டுள்ளது.

(4) வங்கியில் கடன்பட்டோரின் நேரடிவைப்பான 400ரூபாவுக்கான பதிவு காசேட்டில் 40ரூபா எனப் பதியப்பட்டுள்ளது.

(5) வியாபார நிறுவனத்தினால் சீலன் எனும் கடன் கொடுத்தோர் ஒருவனுக்கு வரைந்து கொடுக்கப்பட்ட 2600ரூபா பெறுமதியான காசோலையானது கடன்கொடுத்தோனால் இன்னமும் வங்கியில் ஒப்படைத்து பணமாக மாற்றப்படவில்லை.

(6) வங்கியில் வியாபார நிறுவனத்தால் வைப்பிலிடப்பட்ட 1500ரூபா காசோலையானது வங்கியால் இன்னமும் நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

5) 30.06.95ல் "ரஞ்சன்" வியாபார நிறுவனத்திற்கு வணிக வங்கியால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்றானது வங்கிக் கூற்றுப்படி வங்கி மீதியாக 46500 ரூபாவினைக் காட்டியது. ஆனால் வியாபார நிறுவனத்தின் காசேட்டிலுள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக்குரிய காரணங்கள் வருமாறு.

(அ) வங்கியில் ரஞ்சா வியாபார நிறுவனத்தால் தனது கணக்கில் வைப்பிலிட்ட 2000 ரூபாவுக்கான பதிவானது வங்கியினால் தவறுதலாக ரஞ்சன் நிறுவன கணக்கில் செலவுவைத்துள்ளது.

(ஆ) விற்பனையால் பெற்ற பணமான 600 ரூபாவுக்கான பதிவானது தவறுதலாக காசேட்டின் வங்கி நிரலில் வரவில் 6000 ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

(இ) வங்கி அறவிட்ட காசோலைப்புத்தகக் கட்டணம்300 ரூபா காசேட்டில் 3000 ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

(ஈ) நிறுவன உத்தரவின் பெயரில் வங்கியினால் இன்னோர் நிறுவனவங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்ட 300 ரூபாவுக்கான பதிவு காசேட்டில் இன்னமும் பதியப்படவில்லை.

(உ) வங்கி வரவு வைத்த காப்புறுதி 500 ரூபா காசேட்டிலும் வரவு வைக்கப் பட்டுள்ளது.

(ஊ) வங்கிசெலவுவைத்த பங்குலாபம் 1000 ரூபா காசேட்டிலும் செலவு வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) "சாமினா" வியாபார நிறுவனத்தின் காசேடானது காசேட்டின் படி வங்கி மேலதிகப்பற்றாக 30.09.2001ல் 79250 ரூபாவினைக் காட்டியது. ஆனால் அத்திகதியில் வங்கியினால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்றிலுள்ள வங்கி மீதியுடன் இனங்காமைக்குரிய காரணங்கள் பின்வருமாறு.

(1) தீர்வையாகாத காசோலையின் பெறுமதி 2000 ரூபாவாகும்.

(2) காசு எய்தப் பெறாத காசோலையின் பெறுமதி 1200 ரூபாவாகும்.

(3) நிறுவன உத்தரவின் பெயரில் வங்கியினால் இன்னோர் நிறுவன வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்ட 2600 ரூபாவுக்கான பதிவு காசேட்டில் 6200 ரூபா எனப்பதியப்பட்டுள்ளது.

(4) வங்கி செலவு வைத்த முதலீட்டு வருமானம் 4500ரூபாவுக்கான பதிவு காசேட்டில் 5400ரூபா எனப் பதியப்பட்டுள்ளது.

(5) வங்கி வரவு வைத்த மின்சாரம் 3600ரூபாவுக்கான பதிவு காசேட்டில் 6300ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

(6) வங்கி அறவிட்ட வங்கிக் கூலி 500 ரூபா காசேட்டில் 5000 ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

(7) வாடிக்கையாளன் ஒருவனால் வங்கியில் வைப்பிலிட்ட 500 ரூபாவுக்கான பதிவு காசேட்டில் இருதரம் பதியப்பட்டுள்ளது.

7) "கௌசி" வியாபார நிறுவனத்தின் காசேடானது 30.06.2002ல் காசேட்டின் படி வங்கி மீதியாக (பாதகமான மீதியாக) 48000 ரூபாவினைக் காட்டியது. ஆனால் வங்கியினால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்றிலுள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக்குரிய காரணங்கள் பின்வருமாறு.

(1) வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம்380 ரூபா காசேட்டில்830 ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

(2) கடன்கொடுத்தோன் ஒருவனுக்கு வழங்கப்பட்டு அவரினால் வங்கியில் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்ட போது வங்கியால் மறுக்கப்பட்ட காசோலையின் பெறுமதி 1500 ரூபாவாகும்.

(3) வங்கியில் நிறுவன வாடிக்கையாளன பௌசியின் நேரடி வைப்பு 3500 ரூபாவாகும்.

(4) வங்கி வரவு வைத்த மின்சாரம் 2000 ரூபா காசேட்டிலும் வரவு வைக்கப் பட்டுள்ளது.

(5) வங்கி செலவு வைத்த பங்குலாபம் 1500 ரூபா காசேட்டிலும் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(6) வரவு வைக்கப்படாத காசோலையின் பெறுமதி 1200 ரூபாவாகும்.

(7) செலவு வைக்கப்படாத காசோலையின் பெறுமதி 1800 ரூபாவாகும்.

(8) வங்கி அறவிட்ட காசோலைப்புத்தகக்கட்டணம் 300 ரூபா காசேட்டில் இருதரம் பதியப்பட்டுள்ளது.

8) "மோகன்" என்ற வியாபார நிறுவனத்திற்கு வணிக வங்கியினால் .அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்றானது வங்கிக்கூற்றுப்படி வங்கி மேலதிகப்பற்றாக 31.12.2001ல் 60000 ரூபாவினைக்காட்டியது. ஆனால் அதே நேரத்தில் காசேட்டிலிருந்த வங்கி மீதியுடன் இணங்கமைக்குரிய காரணங்கள் பின்வருமாறு:

i) வாடிக்கையாளன ராமனால் வங்கியில் வைப்பிலிட்ட 800 ரூபாவிற்கான பதிவு காசேட்டில் இரு தடவை பதியப்பட்டுள்ளது.

ii) நிலையான கட்டளைக்கமைய வங்கி செலுத்திய வியாபார ஒப்பப்பணம் 1200ரூபாவுக்கான பதிவு காசேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

iii) வங்கி அறவிட்ட வங்கிக்கட்டணம் 2000 ரூபா தவறுதலாக காசேட்டில் பக்கம் மாறி 200 ரூபாவால் குறைத்துப் பதியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) வங்கி வரவு வைத்த காப்புறுதி 3000 ரூபாவிற்கான பதிவு காசேட்டில் பக்கம் மாறி 300 ரூபா எனப்பதியப்பட்டுள்ளது.

v) வங்கியால் வரவு வைக்கப்படாத காசோலையின் பெறுமதி 1300 ரூபாவாகும்.

vi) வங்கியால் செலவு வைக்கப்படாத காசோலையின் பெறுமதி 2000 ரூபாவாகும்.

vii) முதலீட்டு வருமானமாகப் பெற்ற 4000 ரூபா தவறுதலாக காசேட்டின் வங்கி நிரலில் வரவில் 400 ரூபாவால் குறைத்துப் பதியப்பட்டுள்ளது.

9) "மணியரசன்"வியாபார நிறுவனத்திற்கு வணிக வங்கியால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக்கூற்றானது வங்கிக் கூற்றுப்படி வங்கிமேலதிகப்பற்றாக 31.03.2001இல் 45600 ரூபாவினை எடுத்துக்காட்டியது. ஆனால் நிறுவன காசேட்டிலுள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக்குரிய காரணங்கள் பின்வருமாறு:

(1) புகலரசன் கடன்பட்டோனால் நிறுவன வங்கிக்கணக்கில் வைப்பிலிட்ட 3000 ரூபா உண்டியலுக்கான பதிவு காசேட்டில் இன்னமும் பதியப்படவில்லை.

(2) வங்கி நிறுவன நடைமுறைக் கணக்கிலிருந்து தனக்குரிய சேவைக் கட்டணமாக கழித்துக் கொண்ட 3000 ரூபாவிற்கான பதிவு காசேட்டில் இன்னமும் பதியப்பட்டிருக்கவில்லை.

(3) முதலீட்டு வருமானமாகப் பெற்ற 2000 ரூபாவிற்கான பதிவு தவறுதலாக காசேட்டில் வங்கி நிரலில் வரவில்200 ரூபாவால் குறைத்துப் பதியப்பட்டுள்ளது.

(4) கைத்தேறாத வைப்புக்களின் பெறுமதி 1450 ரூபாவாகும்.

(5) ஒளியரசன் வியாபார நிறுவனத்தால் தனது கணக்கில் வங்கியில் வைப்பிலிட்ட 4000 ரூபாவிற்கான பதிவு தவறுதலாக வங்கியால் மணியரசன் நிறுவனக்கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(6) நிறுவன சேமிப்புக்கணக்கிலிருந்து நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்ட 2600 ரூபாவிற்கான பதிவு காசேட்டில் இன்னமும் பதியப்படவில்லை.

(7) மின்சாரத்திற்காக வழங்கிய காசோலை 3000 ரூபா இன்னமும் வங்கியில் ஒப்படைத்து பணமாக மாற்றப்படவில்லை.

10) "MCS" வியாபார நிறுவனத்தின் காசேடானது காசேட்டின் படி வங்கி மீதியாக 30.09.2000 இல் 73350 ரூபாவினைக் காட்டியது.ஆனால் வங்கியால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக்கூற்றிலுள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக்குரிய காரணங்கள் பின்வருமாறு:

(அ) வங்கியால் நிறுவனக் கணக்கில் செலவு வைக்கப்படாத காசோலையின் பெறுமதி 900 ரூபாவாகும்.

(ஆ) வங்கியால் நிறுவனக் கணக்கில் வரவு வைக்கப்படாத காசோலையின் பெறுமதி 1250 ரூபாவாகும்.

(இ) வங்கி செலுத்திய காப்புறுதி 1500ரூபா காசேட்டில் 150 எனப்பதியப்பட்டுள்ளது.

(ஈ) விற்பனையால் பெற்ற பணமாக 4000 ரூபா தவறுதலாக காசேட்டில் வங்கி நிரலில் 400 ரூபாவால் கூட்டிப் பதியப்பட்டுள்ளது.

(உ) வங்கியில் DCS கடன்பட்டோனின் நேரடி வைப்பு 900 ரூபாவாகும்.

(ஊ) வங்கி அறவிட்ட வங்கிக்கட்டணம் 3000 ரூபா காசேட்டில் 300 ரூபா எனப் பதியப்பட்டுள்ளது.

(எ) வங்கி வசூலித்த பங்கிலாபம் 6000ரூபா காசேட்டில் இன்னமும் பதியப்படவில்லை.

தேவைப்படுவது 1) திருத்திய காசேடு

2) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) "செங்கதிர்" வியாபார நிறுவனத்தின் காசேடானது காசேட்டின்படி வங்கி மீதியாக 31.03.2001 இல் 40500 வினைக் காட்டியது. ஆனால் வங்கியால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக்கூற்றிலுள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக்குரிய காரணங்கள் வருமாறு:

(a) வங்கி வரவு வைத்த மின்சாரம் 1000 ரூபா தவறுதலாக காசேட்டிலும் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(b) வங்கி செலவு வைத்த பங்கிலாபம் 600 ரூபா தவறுதலாக காசேட்டிலும் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(c) வங்கியில் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டபோது வங்கியால் மறுக்கப்பட்ட காசோலையின் பெறுமதி 1200 ரூபா வாகும்

(d) செங்கையால் தனது கணக்கில் வங்கியில் வைப்பிலிட்ட 1500 ரூபா ஓர் விடயம் தவறுதலாக வங்கியால் செங்கதிர் நிறுவனக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(e) வங்கியில் பணமாக மாற்றப்படாத காசோலையின் பெறுமதி 1250 ரூபாவாகும்

(f) வங்கியால் பணமாக மாற்றப்படாத காசோலையின் பெறுமதி 1500 ரூபாவாகும்

(g) வங்கி அறவிட்ட காசோலைப்புத்தகக்கட்டணம் 300ரூபா காசேட்டில் 3000ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

(h) செஞ்சுடா கடன் பட்டோனின் வங்கியில் நேரடிவைப்பான 1400 ரூபா காசேட்டில் 140 ரூபாவென இருதரம் பதியப்பட்டுள்ளது.

12) 31.03.88 இல் "நித்தியா" வியாபார நிறுவனத்தின் காசேடானது காசேட்டின் படி வங்கி மீதியாக (பாதகமான மீதியாக) 36000 ரூபாவினைக் காட்டியது. ஆனால் வங்கிக் கூற்றிலுள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக் குரிய காரணங்கள் பின்வருமாறு.

(அ) வங்கி அறவிட்ட செலவினங்கள் பின்வருமாறு

வங்கிக் கட்டணம் 600 ரூபா     காசோலைப் புத்தகக் கட்டணம் 300 ரூபா

(ஆ) வித்தியா கடன்பட்டோனின் வங்கியில் நேரடி வைப்பு 1600 ரூபாவாகும்

(இ) வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம் 1300 ரூபா தவறுதலாகக் காசேட்டில் 3100 ரூபா எனப் பதியப்பட்டுள்ளது.

(ஈ) சத்தியாஎனும் கடன்கொடுத்தோனுக்கு வழங்கப்பட்டு ~~காசோலையினால்~~ வங்கியில் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்ட போது வங்கியால் மறுக்கப்பட்ட காசோலையின் பெறுமதி 1200 ரூபாவாகும்.

(உ) காசேட்டின் பெறுவனவுப் பக்க கழிவு நிரல் தொகையான 600 ரூபா தவறுதலாக காசேட்டின் வங்கி நிரலில் வரவிடப்பட்டுள்ளது.

(ஊ) மாற்றப்படாத காசோலையின் பெறுமதி 1200 ரூபாவாகும்

(எ) வசூலிக்கப்படாத காசோலையின் பெறுமதி 900 ரூபா

13) 30.09.2001 இல் "நல்லவன்" வியாபார நிறுவனத்தின் காசேடானது காசேட்டின் படிவங்கி மீதியாக (மேலதிகப் பற்றாக) 76500 ரூபாவினைக் காட்டியது. ஆனால் வங்கியினால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக்கூற்றிலுள்ள வங்கி மீதியுடன் இணங்காணாமைக்குரிய காரணங்கள் பின்வருமாறு.

(1) வங்கியில் இன்னமும்கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாதகாசோலைகளின் பெறுமதிகள் வருமாறு.

இல 5544 - 1300 ரூபா

இல 5545 - 1800 ரூபா

இல 5546 - 1200 ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) வங்கியால் பணமாக மாற்றப்பட்டு ~~திரும்பு~~ நிறுவனக்கணக்கில் சேர்க்கப்படாத காசோலைகளின் பெறுமதிகள் வருமாறு

கவி - 5000 ரூபா

புவி - 2000 ரூபா

ரவி - 1000 ரூபா

(3) நிலையான கட்டளைக்கமைய வங்கி செலுத்திய செலவினங்கள் பின்வருமாறு

மின்சாரம் 2500 ரூபா

காப்புறுதி 1000 ரூபா

வியாபார ஒப்பப் பணம் 1750 ரூபா

(4) வங்கிஅறிவிட்ட வங்கிக்கட்டணம்600ரூபா தவறுதலாக காசேடடில் பக்கம்மாறிப் பதியப்பட்டுள்ளது.

(5) நல்லவன் நிறுவன உத்தரவின் பெயரில் வங்கியால் வல்லவன் வியாபார நிறுவன வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்ட 5000ரூபாவுக்கான பதிவு காசேட்டில் 500 என இருதரம் பதியப்பட்டுள்ளது.

(6) பல்லவன் கடன்பட்டோனின் வங்கியில் நேரடி வைப்பு 2000 ரூபாவாகும்.

(7) நல்லவன் வியாபார நிறுவனத்தின் சேமிப்புக் கணக்கில் இருந்து நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்ட 4500 ரூபாவுக்கான பதிவு காசேட்டில் 5400 ரூபாவெனப் பதியப்பட்டுள்ளது.

14) "பிரகலாதன்" வியாபார நிறுவனத்திற்கு வங்கியால் அனுப்பப் பட்டுள்ள வங்கிக் கூற்றானது வங்கிக்கூற்றுப் படி வங்கி மீதியாக 30.06.2001 இல் 73000 ரூபாவினைக் காட்டியது ஆனால் காசேடடில் உள்ள வங்கிமீதியுடன் இனங் காமைக் குரிய காரணங்கள் வருமாறு.

(அ) காசேட்டின் வரவுப்பக்கவங்கிநிரலைக் கூட்டும்போது 1000ரூபாவால் குறைத்துக் கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) காசேட்டின் செலவுப்பக்கவங்கிநிரலைக் கூட்டும்போது600ரூபாவால் குறைத்துக் கூட்டப்பட்டுள்ளது.

(இ) காசேட்டின் செலவுப்பக்கக் கழிவு நிரல் தொகையான 600 ரூபா தவறுதலாக காசேட்டின் வங்கி நிரலில் உள்ளடங்கியுள்ளது.

(ஈ) விற்பனையால் பெற்றபணமான 2000 ரூபா தவறுதலாக காசேட்டின் வங்கி நிரலில் வரவில் 200 ரூபாவால் குறைத்துப் பதியப்பட்டுள்ளது.

(உ) பிரகலாதன் நிறுவன சேமிப்புக் கணக்கில் இருந்து நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்ட 500 ரூபாவுக்கான பதிவு காசேட்டில் 5000 ரூபாவெனப்பதியப்பட்டுள்ளது.

(ஊ) வங்கி கழித்த நடைமுறைக் கணக்கின் சேவைக்கட்டணம் 4000 ரூபா காசேட்டில் 400 ரூபா வென நான்கு தரம் பதியப்பட்டுள்ளது.

(எ) பிரசன்னா என்ற கடன்பட்டோனிடம் இருந்து பெறப்பட்டு வங்கியிலிடப்பட்ட 3000ரூபா காசோலையானது வங்கியினால் இன்னமும் நிறுவனக் கணக்கில் செலவு வைக்கப்பட வில்லை.

15) "சோதனை" வியாபார நிறுவனத்திற்கு வங்கியால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்றானது வங்கிக் கூற்றுப்படி வங்கி மீதியாக 30.06.2001 இல் 100000 ரூபாவினைக் காட்டியது ஆனால் காசேட்டிலுள்ள வங்கிமீதியுடன் இனங்காமைக் குரிய காரணங்கள் வருமாறு.

i. சோதனை நிறுவனம் கணக்கிலிருந்து சாதனை நிறுவன வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்ட 350 ரூபாவுக்கான பதிவு காசேட்டில் 3500 ரூபா எனப் பதியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. வங்கியில் நிறுவனக் கணக்கில் கடன்பட்டோரின் நேரடி வைப்பு 1250 ரூபா வாகும்

iii. வங்கி வரவு வைத்த காப்புறுதி 400 ரூபா காசேட்டில் 4000 ரூபாவால் கூட்டிப்பதியப்பட்டுள்ளது.

iv. வங்கி அறவிட்ட செலவினங்கள் வருமாறு

v. வங்கிக் கூலி 1000 ரூபா காசோலைப் புத்தகக் கட்டணம் 400 ரூபா

vi. வங்கி செலவுவைத்த பங்குலாபம் 600ரூபாகாசேட்டில் 600 ரூபாவால் குறைத்துப் பதியப்பட்டுள்ளது.

vii. வங்கியால் நிறுவனக் கணக்கில் செலவு வைக்கப்படாத காசோலையின் பெறுமதி 1800 ரூபாவாகும்

viii. வங்கியால் நிறுவனக் கணக்கில் வரவு வைக்கப்படாத காசோலையின் பெறுமதி 1200 ரூபாவாகும்

16) "பகிதா" வியாபார நிறுவனத்திற்கு 30.06.2001ல் வங்கியினால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்றானது வங்கிக் கூற்றுப்படி வங்கி மேலதிகப் பற்றாக 73000 ரூபாவினைக் காட்டியது ஆனால் காசேட்டில் உள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக் குரிய காரணங்கள் பின்வருமாறு.

(1) மாற்றப்படாத காசோலையின் பெறுமதி 1000 ரூபாவாகும்.

(2) வசூலிக்கப் படாத காசோலையின் பெறுமதி 850 ரூபாவாகும்

(3) முதலீட்டு வருமானமாகப் பெற்ற 4000 ரூபா தவறுதலாக காசேட்டின் வங்கி நிரலில் 400 ரூபா எனப் பதியப்பட்டுள்ளது.

(4) காசேட்டின் வங்கி நிரலைக் கூட்டிக் கழித்து இறுதி மீதி எடுக்கும் போது வரவுப் பக்கம் 1000 ரூபாவால் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.

(5) 26.06.2001 ல் வங்கியால் நிறுவன வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்ட 800 ரூபா பங்கிலாபம் காசேட்டில் பதியப்பட்டிருக்க வில்லை.

(6) சுகிதா வியாபார நிறுவனத்தால் வங்கியில் தனது கணக்கில் வைப்பிலிட்ட 1600 ரூபாவானது வங்கியினால் பகிதா நிறுவன வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(7) வங்கி செலவு வைத்த பங்கிலாபம் 3000 ரூபா காசேட்டில் 300 ரூபா வெனப் பக்கம் மாறிப் பதியப்பட்டுள்ளது.

(8) கடன் கொடுத்தோன் ஒருவனுக்கு வழங்கப்பட்டிருந்த 1500 ரூபாவுக்கான காசோலை மதிப்பிழந்ததாகக் கருதப்பட்டு பிழையாக காசேட்டில் திரும்ப எழுதப்பட்டிருந்து (வரவு வைக்கப்பட்டிருந்தது.) இக் காசோலைக்கான கொடுப்பனவு வங்கியால் செலுத்தப்பட்டிருந்தது.

17) "நந்தன" வியாபார நிறுவனத்திற்கு 31.03.2002 இல் வங்கியால் அனுப்பப் பட்டுள்ள வங்கிக் கூற்றானது வங்கிக் கூற்றுப்படி வங்கி மேலதிகப் பற்றாக 64600 ரூபாவினைக் காட்டியது ஆனால் காசேட்டில் உள்ள வங்கி மீதியுடன் இணங்காமைக் குரிய காரணங்கள் வருமாறு.

(அ) வங்கியில் வைப்பிட்ட 1600 ரூபா காசோலையானது வங்கியினால் 31.03.2002ம் தேதிக்குப் பின்னரே செலவு வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) பண்டார என்பவருக்கு வழங்கப்பட்ட 1800 ரூபாவுக்கான காசோலை மதிப்பிழந்ததாகக் கருதப்பட்டு பிழையாக காசேட்டில் திரும்ப எழுதப்பட்டிருந்தது (வரவு வைக்கப்பட்டிருந்தது)

(இ) வங்கி அறவிட்ட காசோலைப் புத்தகக் கட்டணம் வங்கிக் கட்டணம் முறையே600 ரூபா1200 ரூபாவாகும்

(ஈ) வங்கிச் செலவு வைத்த பங்குலாபம் 600 ரூபா காசேட்டிலும் செலவு வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) வங்கி வரவு வைத்த மின்சாரம் 300 ரூபா காசேட்டில் 300 ரூபாவால் கூட்டிப் பதியப்பட்டுள்ளது.

(ஊ) சந்தன என்னும் கடன் கொடுத்தோனுக்கு 2250 ரூபா எனும் தொகைக்கு வழங்கப்பட்ட ஒரு காசோலை காசேட்டில் 5250 ரூபா எனப் பதியப்பட்டுள்ளது.

(எ) மந்தன என்னும் கடன் கொடுத்தோர் மீது 2000 ரூபா தொகைக்கு வழங்கப்பட்ட காசோலைகள் 31-03-2002 இன் பின்னரே கடன் கொடுத்தோனால் வங்கியில் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

18) 31.12.2002ல் கவிதா வியாபார நிறுவனத்தின் காசேட்டின் வங்கி நிரல் பின்வருமாறு.

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1.12.94 | மீவ | 90000 | 2 | காசோலை 666 | 1400 |
| 3 | காசோலை ரவி | 6000 | 3 | காசோலை 667 | 1600 |
| 5 | காசோலை ரமேஸ் | 2000 | 6 | காசோலை 668 | 1900 |
| 8 | காசோலை சுரேஸ் | 3000 | 10 | காப்புறுதி | 2500 |
| 11 | முதலீட்டு வருமானம் | 1000 | 12 | வங்கிக் கட்டணம் | 400 |
| 14 | கடன்பட்டோன் ரவிதா | 600 | | மீ.கீ.கொ.செ | 94800 |
| | மீ.கீ கொ. வ | 102600 | | | 102600 |
| | | 94800 | | | |

கவிதா வியாபார நிறுவனத்திற்கு 31.12.2002 ல் வங்கியினால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்று பின்வருமாறு

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 1.12.94 | மீ. கீ. கொ. வ | | | 90000 |
| 2 | காசோலை 666 | 1400 | | 88600 |
| 6 | காசோலை 668 | 1900 | | 86700 |
| 8 | காசோலை சுரேஸ் | | 3000 | 89700 |
| 10 | காப்புறுதி | 2800 | | 86900 |
| 11 | முதலீட்டு வருமானம் | | 1600 | 88500 |
| 12 | வங்கிக் கட்டணம் | 4000 | | 84500 |
| 14 | கடன்பட்டோர் ரவிதா | | 600 | 85100 |
| 16 | கடன்பட்டோர் வகிதா | | 2000 | 87100 |
| 18 | மின்சாரம் | 1100 | | 86000 |
| 21 | காசோலைப் புத்தகக் கட்டணம் | 300 | | 85700 |

மேலே தரப்பட்டுள்ள காசேட்டில் உள்ள வங்கி நிரலையும் வங்கிக்கூற்றிலுள்ள வங்கி நிரலையும் ஒப்பீடு செய்து இரண்டினதும் இறுதி மீதிகள் வேறுபடுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து திருத்திய காசேட்டின் ஊடாக வங்கிக கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) "கல்ப்பனா" வியாபார நிறுவனத்தின் 2002 ஜனவரி மாத காசேட்டு வங்கி நிரல் பின்வருமாறு.

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1.1.2002 | மீ. கீ. கொ. வ | 136000 | 2 | கொள்வனவு 0111 | 1200 |
| 3 | காசோலை சுதன் | 2600 | 3 | சம்பளம் 0112 | 1350 |
| 9 | காசோலை மதன் | 1100 | 9 | வாடகை0113 | 1250 |
| 12 | காசோலை சதன் | 900 | 10 | மின்சாரம் 0114 | 1600 |
| 15 | கடன்பட்டோர்கார்த்திகா | 700 | 13 | சாந்தன் 0115 | 1800 |
| 16 | முதலீட்டு வருமானம் | 3000 | 19 | சேந்தன்0116 | 1950 |
| | | | 21 | வியாபாரஒப்பபணம் | 600 |
| | | | 26 | காப்புறுதி | 2200 |
| | | | 29 | காசோலை | |
| | | | | புத்தகக் கட்டணம் | 2600 |
| | | | | மீ. கீ கொ.செ | 129750 |
| | | 144300 | | | 144300 |
| | மீ. கி. கொ. வ | 129750 | | | |

ஜனவரி மாதத்திற்கான கல்ப்பனா வியாபார நிறுவனத்திற்கு வங்கியால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கூற்று வருமாறு.

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 1.1.2002 | மீ.வ | | 136000 | 136,000 |
| 2 | கொள்வனவு 0111 | 1200 | | 134,800 |
| 9 | காசோலை மதன் | | 1100 | 135,900 |
| 9 | வாடகை 0113 | 1250 | | 134,540 |
| 10 | மின்சாரம் 0114 | 1600 | | 133,050 |
| 13 | வங்கிக் கட்டணம் | 400 | | 132,650 |
| 15 | கடன்பட்டோர் கார்த்திகா | | 7000 | 139,650 |
| 16 | முதலீட்டு வருமானம் | | 300 | 139,950 |
| 21 | வியாபார ஒப்பப் பணம் | 6000 | | 133,950 |
| 26 | காப்புறுதி | 2020 | | 131,930 |
| 28 | கடன் பட்டோர் காஞ்சனா | | 2 100 | 134,030 |
| 29 | காசோலைப் புத்தகக் கட்டணம் | 600 | | 133,430 |

மேலேதரப்பட்டுள்ள காசேட்டில் உள்ள வங்கி நிரலையும் வங்கிக் கூற்றில் உள்ள வங்கி நிரலையும் ஒப்பீடு செய்து மீதிகள் வேறுபடுவதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து திருத்திய காசேட்டின் ஊடாக வங்கிக் கணக்கிணக்கற் கூற்றைத் தயாரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) 2001 ஆண்டு ஏப்பிரல்மாதத்திற்கான பசுபதி வியாபாரநிறுவனத்தின் காசேட்டின் வங்கிநிரல் பின்வருமாறு.

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | காசோலை இலக்கம் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | மீ.கீ.கொ.வ | 109 000 | 2 | கொள்வனவு | 0333 | 1000 |
| | காசு | 4 300 | 4 | மோட்டார் | 0334 | 1900 |
| 6 | காசோலை | | 6 | விளம்பரம் | 0335 | 1300 |
| | வைப்பு | 2 800 | 9 | ரமேஸ் | 0336 | 1600 |
| 8 | காசோலை | | 10 | வாடகை | 0337 | 2100 |
| | வைப்பு | 1 800 | 12 | சம்பளம் | 0338 | 2250 |
| 12 | காசோலை | | 14 | சுரேஸ் | 0339 | 1400 |
| | வைப்பு | 2600 | 15 | நரேஸ் | 0340 | 1250 |
| 13 | காசோலை | | 17 | காசோலைப் | | |
| | வைப்பு | 800 | | புத்தகக் | | |
| 16 | காசோலை | | | கட்டணம் | | 1000 |
| | வைப்பு | 1400 | 19 | பிரகாஸ் | 0341 | 1200 |
| 19 | முதலீட்டு | | | மீ.கீ.கொ.செ | | 115900 |
| | வருமானம் | 400 | | | | |
| 20 | காசு | 2000 | | | | |
| 21 | காசோலை | | | | | |
| | வைப்பு | 3600 | | | | |
| 23 | காசோலை | | | | | |
| | வைப்பு | 1000 | | | | |
| 26 | காசோலை | | | | | |
| | வைப்பு | 1200 | | | | |
| | | 130900 | | | | 130900 |
| | மீ.கீ.கொ.வ | 115900 | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001 ஆண்டு ஏப்பிரல் மாதத்திற்காக வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்று பின்வருமாறு.

| திகதி | விபரம் | பற்று | வரவு | மீதி |
|---|---|---|---|---|
| 1 | மீ. கீ. கொ. வ | | 109 000 | 109 000 |
| 4 | காசோலை 0333 | 1000 | | 108 000 |
| 4 | காசோலை வைப்பு | | 4300 | 112 300 |
| 9 | காசோலை 0336 | 1600 | | 110 700 |
| 12 | காசோலை வைப்பு | | 2600 | 113 300 |
| 12 | காசோலை 0335 | 1300 | | 112 000 |
| 14 | முதலீட்டு வருமானம் | | 4000 | 116 000 |
| 17 | காசோலைப் புத்தகக் கட்டணம் | 150 | | 115 850 |
| 20 | காசு | | 2000 | 117 850 |
| 23 | காசோலை வைப்பு | | 1000 | 118 850 |
| 25 | கடன்பட்டோன் கயபதி | | 1650 | 120 500 |
| | வங்கிக் கட்டணம் | 1200 | | 119 300 |
| 28 | நிலைக் கட்டளை மின்சாரம் | 900 | | 118 400 |
| | காப்புறுதி | 1350 | | 117 050 |

மேலே தரப்பட்டுள்ள காசேட்டில் உள்ள வங்கி நிரலையும் வங்கிக் கூற்றிலுள்ள நிலையில் உள்ள வ
நிரலையும் ஒப்பீடு செய்து இரண்டினதும் இறுதி மீதிகள் வேறுபடுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து
செம்மையாக்கிய காசேட்டின் ஊடாக வங்கிக் கணக்கிணக்கற் கூற்றினைத் தயாரிக்குக.

21) "வில்லன்" வியாபார நிறுவனத்தின் 31.12.2002ல் காசேட்டின் வங்கி நிரல் பின்வருமாறு.

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1.12.02 | மீ.கீ.கொ.வ | 81 600 | 2 | காசோலை 1233 | 1750 |
| | காசோலை ரவி | 1 300 | 4 | காசோலை 1234 | 1450 |
| 6 | காசோலை ரமேஸ் | 1200 | 5 | காசோலை 1235 | 1250 |
| 8 | காசோலை ராதிகா | 1060 | 6 | காசோலை 1236 | 1100 |
| 10 | முதலீட்டு வருமானம் | 400 | 9 | காசோலைப் புத்தகக் கட்டணம் | 3000 |
| 11 | கடன்பட்டோர் ரேகா | 300 | 16 | காப்புறுதி | 200 |
| | | | | மீ.கீ.கொ. செ | 77110 |
| | | 85860 | | | 85860 |
| | மீ.கீ.கொ.வ | 77110 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.12.2002ல் "விஸ்ஸன்" வியாபாரநிறுவனத்திற்கு வங்கியினால் அனுப்பப்பட்டுள்ள வங்கிக்கூற்று பின்வருமாறு.

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 1.12.01 | மீ. கீ. கொ.வ. | | 82200 | 82200 |
| 2 | காசோலை ரேணுகா | | 1000 | 83200 |
| 4 | காசோலை ரவி | | 1300 | 84500 |
| 6 | காசோலை 1231 | 1250 | | 83250 |
| 9 | காசோலை 1233 | 1750 | | 81500 |
| 9 | காசோலை புத்தகக் கட்டணம் | 300 | | 81200 |
| 10 | முதலீட்டு வருமானம் | | 4000 | 85200 |
| 11 | கடன்பட்டோர் ரேகா | | 3300 | 88500 |
| 16 | காப்புறுதி | 2200 | | 86300 |
| 20 | வங்கிக் கட்டணம் | 1300 | | 85000 |
| 29 | மின்சாரம் | 650 | | 84350 |
| 31 | கடன்பட்டோர் அபிஷா | | 1600 | 85950 |

மேலே தரப்பட்டுள்ள காசேட்டு வங்கி நிரலின் ஆரம்ப வங்கி மீதியினையும் வங்கிக் கூற்றில் உள்ள ஆரம்ப வங்கி மீதியையும் இணங்கச் செய்து கொள்வதற்கான சென்றமாதத் தரவுகள் வருமாறு.

(1) மாற்றப்படாதகாசோலைகள்வருமாறு

1231 1250ரூபா

1232 1650ரூபா

(2) வசூலிக்கப்படாதகாசோலைகள்வருமாறு

சாணுகா 1300ரூபா

ரேணுகா 1000ரூபா

தேவைப்படுவது:-

காசேட்டின் வங்கி நிரலையும் வங்கிக் கூற்றின் வங்கி நிரலையும் ஒப்பீடு செய்து இரண்டினதும் இறுதி மீதிகள் வேறுபடுவதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து திருத்திய காசேட்டின் ஊடாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) 2002மார்சமாதத்திற்கான "கணணிமயப்படுத்தல்" என்ற தனிவியாபாரத்தின் காசேட்டின் வங்கிநிரல் வருமாறு.

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | மீதி.கொ.வ | 110600 | 2 | காசோலை UNDP | 1750 |
| 3 | காசோலை DCS | 3600 | 4 | காசோலை CARE | 1450 |
| 4 | காசோலை MCS | 2000 | 5 | காசோலை ICRC | 1100 |
| 6 | காசோலை STP | 1300 | 9 | வங்கிக் கட்டணம் | 150 |
| 10 | கடன்பட்டோன் GTZ | 1200 | 13 | மின்சாரம் | 660 |
| 12 | முதலீட்டு வருமானம் | 200 | 16 | காசோலைப்புத்தகக் கட்டணம் | 3300 |
| | | | 20 | காப்புறுதி | 100 |
| | | | | மீ.கீ.கொ.செ | 110390 |
| | | 118900 | | | 118900 |
| | மீ. கீ. கொ.வ | 110390 | | | |

2002 மார்ச் மதத்திற்கான கணனி மயப்படுத்தல் வியாபார நிறுவனத்திற்கு வங்கியால் அனுப்பி வைக்கப் பட்டுள்ள வங்கிக் கூற்று பின்வருமாறு.

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 1 | மீ.கீ.கொ.வ | | 114660 | 114660 |
| 2 | காசோலை JIT | | 1330 | 115990 |
| | MCS | | 2000 | 117990 |
| 4 | காசோலை JCC | 2540 | | 115450 |
| | IBMS | 1330 | | 114120 |
| | UNDP | 1750 | | 112370 |
| 8 | கடன் பட்டோன் TRRO | | 1660 | 114030 |
| 9 | வங்கிக் கட்டணம் | 1600 | | 112430 |
| 10 | கடன்பட்டோர் GTZ | | 2100 | 114530 |
| 12 | முதலீட்டு வருமானம் | | 2200 | 116730 |
| 13 | மின்சாரம் | 6600 | | 110130 |
| 16 | காசோலைப் புத்தகக் கட்டணம் | 300 | | 109830 |
| 20 | காப்புறுதி | 1000 | | 108830 |
| 26 | வியாபார ஒப்பப் பணம் | 600 | | 108230 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசேட்டில் உள்ள ஆரம்ப வங்கிமீதியினையும் வங்கிக் கூற்றில் உள்ள ஆரம்ப வங்கிமீதியினையும் இணக்கம் செய்வதற்கான சென்றமாத வங்கிக கணக்கிணக்கக் கூற்று வருமாறு.

| விபரம் | + | - | மீதி |
|---|---|---|---|
| காசேட்டின் படி வங்கி மீதி | | | 110600 |
| மாற்றப்படாத காசோலைகள் | | | |
| IBMS | 1330 | | |
| TRO | 2160 | | |
| JCC | 2540 | | |
| வசூலிக்கப்படாத காசோலைகள் | | | |
| IIS | | 640 | |
| JIT | | 1330 | |
| | 6030 | 1970 | 4060 |
| வங்கிக் கூற்றுப்படி வங்கி மீதி | | | 114660 |

எதிர்பார்க்கப்படுவது:- காசேட்டின் வங்கி நிரலையும் வங்கிக் கூற்றின் வங்கி நிரலையும் ஒப்பீடு செய்து இரண்டினதும் இறுதி மீதிகள் வேறுபடுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு திருத்திய காசேட்டினூடாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்குக.

23) 30.09.2002இலும் 31.10.2002இலும் 2 மாதங்களுக்குரிய "சமாதானப் புறா" வியாபார நிறுவனத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள் வருமாறு

30.09.2002 இல் உள்ளவாறானது.

| விபரம் | + | - | மீதி |
|---|---|---|---|
| காசேட்டின் படி வங்கி மீதி | | | 74000 |
| மாற்றப்படாத காசோலை | 2600 | | |
| வசூலிக்கப்படாத காசோலை | | 1350 | |
| | 2600 | 1350 | 1250 |
| வங்கிக்கூற்றின் படி வங்கி மீதி | | | 75250 |

31.10.2002இல் உள்ளவாறானது

| விபரம் | + | - | மீதி |
|---|---|---|---|
| காசேட்டின் படி வங்கி மீதி | | | 99000 |
| மாற்றப்படாத காசோலை | 1600 | | |
| வசூலிக்கப்படாத காசோலை | | 6300 | |
| | 1600 | 6300 | (4700) |
| வங்கிக் கூற்றுப்படி வங்கி மீதி | | | 94300 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.10.2002 இல் முடிவுற்ற மாதத்திற்காக வங்கியால் அனுப்பப் பட்டுள்ள வங்கிக் கூற்று வருமாறு.

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 1/4 | மீ. கீ. கொ. வ | | | 75250 |
| 30/4 வரை | வைப்புக்கள் | | 91250 | 166500 |
| | கொடுப்பனவுகள் | 72 200 | | 94300 |

"சமாதானபபுறா" வியாபாரநிறுவனத்தின் 31.10.2002 இல் முடிவுற்ற மாதத்திற்கான வங்கிக் கணக்கைத் தயார் செய்க.

24) "சமாதானப் பாதை" வியாபார நிறுவனத்தின் 28-02-2002, 31-03-2002 முடிவுற்ற மாதங்களுக்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் பின்வருமாறு:

| விபரம் | 28-02-2002 | 31-03-2002 |
|---|---|---|
| காசேட்டின் படி வங்கி மீதி | 71500 | 87500 |
| கூட்டுக: | | |
| வரவு வைக்கப்படாத காசோலை | 2600 | 1300 |
| கழிக்க: | | |
| செலவு வைக்கப்படாத காசோலை | 21450 | 1950 |
| வங்கிக்கூற்றுப்படி வங்கி மீதி | 72650 | 86850 |

வங்கியினால் சமாதானப்பாதை வியாபார நிறுவனத்திற்கு 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்காக அனுப்பப்பட்ட வங்கிக் கூற்று பின்வருமாறு

| திகதி | விபரம் | பற்று | வரவு | மீதி |
|---|---|---|---|---|
| 01.03.2002 | மீ. கீ. கொ. வ | | 72650 | 72650 |
| | வைப்புக்கள் | | 68650 | 141300 |
| | கொடுப்பனவுகள் | 54450 | | 86850 |
| 28/2/2000 | மீ. கீ. கொ. வந்தது | | | 86850 |

பெப்பிரவரி மாதத்திற்குரிய "சமாதானப் பாதை" வியாபார நிறுவனத்தின் வங்கிக் கணக்கினைத் தயாரிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. "சமாதான யாத்திரை" வியாபார நிறுவனத்தின் 30-06-2001 இலும் 31-07-2001 இலும் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கிணக்கக் கூற்றுகள் பின்வருமாறு

| விபரம் | தொகை 30.06.2001 | தொகை 31.07.2001 |
|---|---|---|
| காசேட்டின் படி வங்கி மீதி | 73360 | 110610 |
| கூட்டுக | | |
| கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை | 2450 | 3650 |
| முதலீட்டு வருமானம் | - | 1350 |
| கடன்பட்டோரின் நேரடி வைப்பு | - | 1800 |
| | 75810 | 117410 |
| கழிக்க | | |
| தீர்வையாகாத காசோலை | 1600 | 1700 |
| காப்புறுதி | - | 1250 |
| வங்கிக் கட்டணம் | - | 600 |
| வங்கிக் கூற்றுப்படி வங்கிமீதி | 74210 | 113860 |

31-07-2001 இல் வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்றின் படி

(அ) வங்கி 01.07.2001 – 31.07.2001 வரை "சமாதானயாத்திரை" நிறுவனக் கணக்கில் செலவு வைத்த மொத்த தொகை 71470

(ஆ) வங்கி 01.07.2001 – 31.07.2001 வரை "சமாதான யாத்திரை" நிறுவனக் கணக்கில் வரவு வைத்த மொத்தத் தொகை 31820

31-07-2001 உள்ளவாறான நிறுவன வங்கிக் கணக்கைத் தயாரிப்பதுடன் திருத்திய காசேடு ஒன்றையும் தயாரிக்க.

